**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூலை - 2017

## Term Examination, July - 2017

| தரம் :- 12 (2018) | இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | (11) | 1 | (21) | 5 | (31) | 2 | (41) | 3 |
| (2) | 3 | (12) | 5 | (22) | 2 | (32) | 3 | (42) | 5 |
| (3) | 4 | (13) | 4 | (23) | 1 | (33) | 4 | (43) | 4 |
| (4) | 3 | (14) | 5 | (24) | 3 | (34) | 1 | (44) | 1 |
| (5) | 2 | (15) | 3 | (25) | 2 | (35) | 2 | (45) | 3 |
| (6) | 3 | (16) | 4 | (26) | 4 | (36) | 3 | (46) | 1 |
| (7) | 4 | (17) | 2 | (27) | 1 | (37) | 3 | (47) | 5 |
| (8) | 2 | (18) | 3 | (28) | 5 | (38) | 2 | (48) | 3 |
| (9) | 3 | (19) | 1 | (29) | 2 | (39) | 4 | (49) | 2 |
| (10) | 1 | (20) | 2 | (30) | 4 | (40) | 3 | (50) | 4 |

பகுதி - II

(1) i)
- ✦ சைவ, வைணவ, சாக்த, காணபத்திய, கௌமார சௌர நெறிகள் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.
- ✦ கடவுள் நம்பிக்கைக்கு முதன்மை வழங்கும் மும்மூர்த்தி வழிபாடுகள்
- ✦ ஆலய வழிபாடுகள், தலயாத்திரைகள், உருவவழிபாடு விரதம், தலச் சிறப்புக்கள், முதலிய சமய நெறிகளின் விருத்திக்கு காரணமாக அமைந்தமை.
- ✦ தெய்வங்கள் தொடர்பான கதைகள், தெய்வங்களின் தத்துவத் தொடர்புகள்
- ✦ வேத அத்தியாயங்களும் தோத்திரங்களும் இடம் பெற்றன.
- ✦ கிரியை வழிபாடுகள் பூசை முறைகள்
- ✦ சண்மத நெறிகள், இறை நம்பிக்கை, வழிபாட்டு அம்சங்கள் சமய ஆசாரங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

ii)
- ✦ புராணங்களின் பஞ்சலக்கணக் கருத்துக்கள் இலக்கிய மரபுக்கு அடிப்படையானவை
- ✦ தமிழ் மொழிப் புராணங்கள், தல புராணங்கள், மகாத்மியங்கள் போன்றவற்றுடன் தொடர்பானவை
- ✦ அகத்தியர், நாரதர், விஸ்வா மித்திரர் முதலியோர்களின் கதைகள்
- ✦ இதிகாசங்கள் சாகுந்தலம், இரகுவம்சம் முதலிய காப்பியங்களும் புராண இலக்கிய மரபுகளைக் குறிப்பன.
- ✦ சிற்பசாத்திரம் முதலிய கலை நூல்களிலும் தோத்திரப் பாடல்களிலும் காணலாம்
- ✦ பல்வேறுபட்ட இந்திய மொழி இலக்கியங்களிலும் இதன் செல்வாக்கு உண்டு.

iii) ✦ பஞ்சலட்சணங்களில் வம்ச வரலாறுகள் கூறப்படுகின்றது.

✦ புராணங்களில் கூறப்பட்ட யுகங்கள் அரச வரலாறுகளுடன் தொடர்பானவை

✦ நந்த வம்சம் மோரிய வம்சம் பிரதானமானவை

✦ சந்திர வம்சம், சூரிய வம்சம், ஆகிய அரச வம்சங்கள்

✦ சாதவாகன சுங்கர், குஷாண வரலாறுகள்

✦ அரசர்கள் தெய் வாம்சம் பொருந்தியவர்கள்

✦ மகதம், கோசலம் முதலிய ஆட்சிகள் பற்றிய கருத்துக்கள்

✦ யாகங்கள் பற்றிக் கூறும் போது அரச வம்சங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன

✦ கி.மு 6 தொடக்கம் குப்தர் காலம் வரையான அரசர்களின் வரலாறுகளைப் பற்றி அறிய உதவுகின்றன

iv) ✦ கோயிற் சிற்ப தோற்றங்கள் புராணக் கதைகளோடு தொடர்பானவை

✦ திரிபுராந்தகர் காமாந்தகர், லிங்கோற்பவர் காலாரி மூர்த்தி முதலிய வடிவங்கள் புராணக் கதைகளோடு இணைந்தவை

✦ வைணவ சிற்பம், பாகவத புராணக் கதைகளுடன் தொடர்பானவை

✦ சக்தியின் மகிடாசுர மர்த்தனி வடிவங்களும் புராணக் கதைகளுடன் தொடர்பானவை

(5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

(2) i) ✦ தொன்று தொட்டு வரும் அறிவு

✦ ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்

✦ ஆ - பசு<br>க - பதி } முப் பொருளை உணர்த்தும் நூல்<br>ம - பாசம்

✦ ஆ - சிவஞானம்<br>க - மோட்சம் } மலத்தை நாசம் செய்து சிவஞானத்தைக் கொடுத்து மோட்ச<br>ம - மல நாசம் த்தை நல்குவது

✦ புராண இதிகாசத்திற்கு பிற்பட்ட காலம் திருமந்திரத்திற்கு முற்பட்ட காலம்

ii) ✦ ஆன்ம ஈடேற்றம் கருதி ஆகமக் கிரியை முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

✦ ஆலயக் கிரியைகள் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இரு வகையில் நோக்கப்படுகின்றது.

✦ ஆன்மார்த்த கிரியை பூர்வ கிரியை, அபரக் கிரியை

✦ பரார்த்த கிரியை நித்திய கிரியை, நைமித்திய கிரியை பற்றிய கருத்துக்கள்

✦ கோயிலையும், திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை கிரியைகள்

✦ கிரியைகள் ஆற்றும் விதிகள், பூஜை, மந்திர உச்சாடனங்கள் நிவேதனப் பொருள் பற்றியும் குறிப்பிடல்

✦ பூஜா விதிப்படலம், மந்திர அவதாரப்படலம் பற்றிய கருத்துக்கள்

✦ கர்ஷணம் பிரதிட்டை, உற்சவம். பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளின் விளக்கங்கள்

The National e-learning Portal for The General Education

iii) ✦ ஆகமம் என்ற சொல்லின் தத்துவ விளக்கம்

ஆ - பசு
க - பதி
ம - பாசம்

முப்பொருள் விளக்கம்

ஆ - சிவஞானம்
க - மோட்சம்
ம - மலநாசம்

✦ யோக பாதம், ஞான பாதம் என்பவற்றில் அதிகமான சைவ சித்தாந்த கருத்துக்கள்
✦ கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் போன்றவற்றில் சித்தாந்த சிந்தனைகள்
✦ ஐந்தொழில் தத்துவங்கள்
✦ கொடி மரம் - பதி
கொடிச் சீலை - பசு
கொடிக் காயிறு - பாசம்
திரைச்சீலை - மாயை
✦ ஆலய வழிபாட்டில் நாற்பாதங்கள்
✦ பதி படலம், பசு படலம், மாயா படலம், சத்தி நிபாத படலம் போன்றவற்றில் சித்தாந்த கருத்துக்கள்
✦ சுத்தாத்துவித முத்தி பற்றிய கருத்துக்கள்

(3) ✦ பல்லவ மன்னர்கள் இந்து சமய நெறியை தமது அரச நெறியுடன் இணைத்தார்கள்
✦ அரசர்களின் சடங்கு முறைகள் வைதீக நெறி சார்ந்தவையாகும் }
✦ அக்கிர காரங்களில் வைதீகக் கல்வி போதிக்கப்பட்டது }
✦ மன்னர்கள் நாட்டியம், சிற்பம், இதிகாச புராணங்களை போதிக்கும் நிறுவனங்களுக்கு உதவி புரிந்தார்கள்.
✦ கடிகைஸ் தானங்களை உருவாக்கினார்கள்
✦ இந்து சமய மரபுகளை வளர்த்தார்கள்
✦ ஆலயங்களை அழியாத பொருட்களினால் அமைத்தார்கள்
✦ ஆகம முறைப்படி ஆலயங்கள் அமைக்கப்பட்டன
✦ சைவத்தின் வளர்ச்சியினால் புறச் சமயங்கள் தளர்ச்சி பெற்றன
✦ நாயன்மார்களின் பணிகள் சைவ சமய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கின
✦ திருப்பதிகங்கள் பாடுவது எழுச்சி பெற்றது
✦ பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன
✦ பதிகங்களில் இறைவனின் சிறப்பு பெருமைகள் அருட் சிறப்புக்கள் போன்றன கூறப்பட்டது.
✦ பக்தி நெறியில் மன்னர்களும் இணைந்து கொண்டார்கள்
✦ சைவ நாற்பாதங்கள் சிறப்பு பெறுதல் மக்களது சமய வாழ்வு வளம் பெற உதவியது
✦ மன்னர்கள் குகைக் கோவில், ஒன்றைக் கல் கோவில் கற்றளிக் கோவில்களை அமைத்தமை
✦ வைணவ வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பணி உதவியது
✦ விண்ணகரங்கள் மீது ஆழ்வார்கள் பாடல்களைப் பாடினார்கள் *(20 புள்ளிகள்)*

(4) i) சோழர் காலக் கட்டிடக் கலை வளர்ச்சியினை நான்கு கால கட்டமாக வகைப்படுத்திக் கொள்ளலாம்

- ✦ விஜயாலயன் முதல் பராந்தகன் வரையுள்ள காலம் (கி.பி 850 - 950 வரை)
- ✦ பராந்தகன் முதல் இராஜராஜன் வரையுள்ள காலம் (கி.பி 950 - 1000 வரை)
- ✦ இராஜராஜன் முதல் முதலாம் குலோத்துங்கள் வரையுள்ள காலம் (கி.பி 1000 - 1070 வரை)
- ✦ முதலாம் குலோத்துங்கன் முதல் மூன்றாம் இராஜேந்திரன் வரையுள்ள காலம் (கி.பி 1070 - 1250 வரை)

- ✳ முதலாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அளவில் சிறியதாக அமைந்தது. அவை பல்லவர் காலப் பாணியை அடித்தளமாக கொண்டவை. விஜயாலய சோழேச்சரம், ஆதித்த ஈஸ்வரம் மூவர் கோயில், திருச்சிராப் பள்ளி. ஸ்ரீ நிவாஸ் நல்லூரில் உள்ள கோரங்க நாதர் கோயில் குறிப்பிடத்தக்கவை. இவை ஆகம மரபு சார்ந்தவை. வனப்புமிக்க அதிஷ்டானம் அர்த்த மண்டபம், விமானம், தேவகோஷ்டம் ஆகிய அம்சங்கள் முக்கியமானவை.
- ✳ இரண்டாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அளவில் பெரிதாகவும். தூண் அமைப்புக்களில் அலங்கார வேலைப்பாடுகள் கொண்டதாகவும் காணப்பட்டது. பாடல் பெற்ற தலங்கள் புனர் நிர்மானம் செய்யப்பட்டது. இக்காலத்தினை செம்பியன் மாதேவிக் காலம் என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டது.
- ✳ மூன்றாம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் அபார வளர்ச்சியினை கொண்டிருந்தது. தஞ்சைப் பெருவுடையார் ஆலயம் கங்கை கொண்ட சோழேஸ்வரம் கட்டிடக் கலையின் புதியதொரு பரிமாணத்தைக் கொண்டு விமானம், மண்டபம் தூபி, தூண்கள், சுற்றுப்பிரகாரம் போன்றன அமைக்கப்பட்டது.
- ✳ நான்காம் கட்டத்தில் எழுந்த ஆலயங்கள் பல வேலைப்பாடுகள் கொண்டதாக தோற்றம் பெற்றன. தாராசுரம், திரிபுவனம், ஐராவதேஸ்வரம், கம்பஹரேஸ்வரர், அமிர்தகடேஸ்வரர் சூரியனார் கோயில், போன்றன அமைக்கப்பட்டாலும் சோழர்கால பாணியின் முதிர்ச்சியாகவே விளங்கின. விமானம் மண்டபம், சுற்றுப்பிரகாரம் நூறு கால் மண்டபம், ஆயிரம் கால் மண்டபம், திருச் சுற்று மாளிகை, ஏழு நிலை கோபுரம் முதலியன அமைக்கப்பட்டன.

ii)

- ✦ விமானங்கள் ஏகதளம் , துவிதளம், முதலாக பதினைந்து தளவரிசைகளைக் கொண்டிருந்தன.
- ✦ விமானங்கள் உயரமாக அமைந்தன
- ✦ தஞ்சைப் பெருவுடையார் கோயில் திராவிடக் கட்டடக் கலையின் நிறைவான வளர்ச்சிக்குச் சான்று
- ✦ தஞ்சைப் பெருவுடையார் விமானம் 216 அடி உயரமும் பதினைந்து தளங்களையும் கொண்டது.
- ✦ முழுமையான கருங்கற் சிற்பங்கள் விமானத்தை அழகுபடுத்துகின்றது.
- ✦ விமானத்தில் 82 நாட்டிய கரணங்கள் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.
- ✦ விமானத்திலுள்ள பிரமந்தக்கல் $25\frac{1}{2}$ சதுர அடி கொண்டதாகும்
- ✦ கங்கை கொண்ட சோழேஸ்வர விமானம் 186 அடி உயரமும் 08 தளங்களையும் கொண்டது. எழில் மிக்க சிற்ப அலங்காரங்களும் சித்திர வேலைபாடுகளும் மிகுதியாக காணலாம்.
- ✦ புராணக் கதைகளைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள் விமானத்தை அலங்கரிக்கின்றது.

(5) i)

- ✦ சிற்ப சாத்திர அளவுப் பிரமாணப்படி அமைக்கப்பட்டது.
- ✦ கலை எழில் மிக்க நடனக் கோலத்துடன் விளங்குவது



The National e-Learning Portal for The General Education

- ✦ உத்தம தசதால அளவுப் பிரமாணத்தில் உருவாக்கப்படுவது
- ✦ சமய தத்துவச் சிறப்பு மிக்கது
- ✦ வலது திருவடி ஊன்றியும் இடது திருவடி தூக்கியும் வீசு கரம், அபயகரம், மற்றும் உடுக்கை, அக்கினி ஏந்திய திருக்கரங்கள்
- ✦ சடா முடி, கங்கை பிறை அரவாபரணம் புலியாடை ஆகியவற்றுடன் கூடிய வடிவம்
- ✦ முயலகன் மீது வலது திருவடி ஊன்றி பாம்பினையும் சிலம்பு, மணி, சூலம், கோடரி கொண்டு முக் கண்ணுடன் விளங்குகின்றார்.
- ✦ நடராசரின் தோற்றப் பொலிவினை

  "தோற்றம் துடியதனில் தோயுந்நிதி அமைப்பில்......" என்று உண்மை விளக்கமும்

  "குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயும்........."

  என்று திருநாவுக்கரசரும் புகழ்ந்து குறிப்பிடுகின்றனர்

ii) ✦ ஐந்தொழில் தத்துவம்

| | | |
|---|---|---|
| படைத்தல் | - | உடுக்கை ஏந்திய கரம் |
| காத்தல் | - | அபய கரம் |
| அழித்தல் | - | அக்கினியுடன் கூடிய கரம் |
| மறைத்தல் | - | ஊன்றிய திருவடி |
| அருளல் | - | தூக்கிய திருவடி |

✦ திருவைந்தெழுத்தின் தொடர்பு

| | | |
|---|---|---|
| ந | - | திருவடி |
| ம | - | திருவயிறு |
| சி | - | திருத்தோள் |
| வா | - | திருமுகம் |
| ய | - | திருமுடி |

✦ முயலகன் - ஆன்மா

பாம்பு - ஆணவம்

முக்கண் - இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி

சிலம்பு - பலவினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதைக் குறிக்கின்றது.

திருவாசி - ஓங்காரத்தைக் குறிக்கின்றது

சடாமுடி - ஞானம்

- ✦ நடராஜர் விக்கிரகம் சமய கலாதத்துவ, தத்துவம் தொடர்பான ஆய்வாளர் கருத்துக்கள்

(6) i) ✦ பிரித்தானியர் ஆட்சியில் அவர்களது பண்பாடு

கிறிஸ்தவ சமயம் ஆகியவற்றின் விளைவாக புதிய சீர்திருத்தவாதிகள் தோற்றம் பெற்ற காலம்

- ✦ 18ம் நூற்றாண்டில் 1774 ஆம் ஆண்டு வங்காளத்தில் பிறந்தார். 1833 இல் இலண்டனில் காலமானார்.

ii) ✦ வேதத்தை ஏற்றுக் கொண்டமை

- ✦ பரம் பொருள் ஒன்றே என்னும் கொள்கையை ஏற்றல்
- ✦ உருவ வழிபாட்டை ஏற்கவில்லை. 1804 இல் உருவ வழிபாட்டை எதிர்த்து துண்டுப்பிரசுரம்வெளியிட்டமை

The National e-learning Portal for The General Education

- ✦ மேலைத்தேய கல்வி மரபில் ஒளி பெறவேண்டும் என்ற கருத்தினை வலியுத்தியமை
- ✦ ஆங்கிலக் கல்விக் கல்லூரி, சமஸ்கிருதக் கல்விக் கல்லூரி நிறுவியமை
- ✦ *1828* இல் பிரம்ம சமாஜம் நிறுவப்பட்டது
- ✦ உடன் கட்டை ஏறும் வழக்கத்தை *1829* இல் தடை செய்தமை
- ✦ பால்ய விவாகக் தடை ✦ சிசு கொலைத் தடை
- ✦ மத மாற்றத்தினை தடுத்தமை ✦ பலதார மணத்திற்கு எதிர்ப்பு
- ✦ விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவு ✦ பெண்களுக்கு கல்வி
- ✦ பெண்களுக்கு சொத்துரிமை
- ✦ துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், நூல்கள் வெளியிட்டமை

iii) ✦ கல்வியில் நாட்டம் ஏற்பட்டமை ✦ மதமாற்றம் தடுக்கப்பட்டமை
- ✦ சமூக விழிப்புணர்வு ஏற்பட்டமை ✦ அறிவியல் சிந்தனை வளர்ந்தமை
- ✦ மூடக் கொள்கையில் இருந்து நீங்கி அறிவைப் பெற்றமை
- ✦ வர்ண தர்மம் கடந்த வாழ்வியல்

(7) i) ✦ வர்த்தக நடவடிக்கைகள் ✦ குடியேற்றங்கள்
- ✦ திருமண உறவு முறைகள் ✦ சுதேசிகளின் நாகரிகத்தில் ஸ்திரமற்ற தன்மைகள்
- ✦ அரசியல் நடவடிக்கை

ii) ✦ அரச சபைகளில் அர்த்த சாத்திரம், தர்ம சாத்திரம் என்பவற்றின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.
- ✦ அரச சபைகளில் இந்து சமய முறைப்படி பட்டாபிஷேப விழாக்கள் இடம் பெற்றன.
- ✦ அரசர்கள் தம்மை திருமாலின் அவதாரமாக கருதினர். இது தேவராஜ வழிபாடாக மாற்றம் பெற்றது.
- ✦ அரச சபையில் புரோகிதர்கள் “இராஜகுரு” என அழைக்கப்பட்டமை
- ✦ பிரமாணர்களுக்கு தானம் வழங்கியமை
- ✦ புராண இதிகாச செல்வாக்கு
- ✦ கோயில்களில் விக்கிரக வழிபாடு
- ✦ திரு வெம்பாவை, திருப்பாவை செல்வாக்கு
- ✦ அகத்தியர் வழிபாடு - பட்டார குரு என வழிபடப்பட்டமை
- ✦ பௌத்த இந்து மத ஒற்றுமைகள்
- ✦ சைவ வைணவ கோயில்கள் கட்டப் பெற்றன
- ✦ புத்தரையும் சிவனையும் தொடர்புபடுத்தும் மரபு சிவபுத்தர்
- ✦ இந்து விழாக்கள் சிறப்படைந்தமை குறிப்பாக தைப்பூசம் வருடப்பிறப்பு
- ✦ இந்து முறைப்படி, யாகங்கள் நடை பெற்றமை அரண்மனையில் இராஜ சூயம் முதலான வேள்விகள் மற்றும் வைதீக முறைப்படி சடங்குகள்

iii) ✦ கோயிற் கட்டடக்கலை விக்கிரக்கலை சிற்பக்கலை, சிறப்படைந்தமை. அங்கோர்வாத் கோயிலமைப்பு பிரதானமானது மற்றும் பிரம்பனம் கோயில்

e-thaksalawa National e-learning Portal for The General Education

- இந்து சமய மரபு வழிக்கலை வடிவங்கள்
- கோயில்களில் எழுச்சி
- நாட்டார் வழக்கிம்பலில் இராமாயணம் மகாபாரத கதைகள் நாட்டிய நாடகங்கள்
- பௌத்த கோயில்களில் இராமாயணச் சிற்பங்கள்
- இராமாயணத்தை தழுவி ஜனரஞ்சகமாக கூத்து வடிவங்கள்
- செங்கல், கருங்கல் கொண்டு கட்டடங்கள் அமைக்கும் முறைகள்
- ஆந்திர பிரதேச கலை, கலிங்க பிரதேச கலை பல்லவக் கலை முறைகள் பின்பற்றப்பட்டமை

iv)
- சமஸ்கிருத மொழியின் செல்வாக்கு
- இந்திய அரசியல் நூல்களைத் தழுவி மலாய மொழியில் நூல்கள் எழுந்தன
- வேத, புராண, இதிகாசம், காவியம், நாடகம் பற்றிய குறிப்புக்கள் சாசனங்கள் மூலம் உள்ளன.
- இலக்கியங்கள் காவிய நடையிலும் ஆணி அலங்கார நடையிலும் எழுதப்பட்டன.
- தாய்லாந்து நாட்டார் கூத்து, சிற்பக்கலை மகாபாரத இராமாயண கதைகள்
- இராமாயணம் மலாய் மொழியில் எழுதப்பட்டது.

இவைகளும் குடாரமானவை, பாரத யுத்தம், அர்ச்சுனன் விவாகம்

- அரண்மனைகளில் அர்த்த சாத்திரம், பகவத்கீதைக் கூற்றுக்கள் ஆலோசனையாக கூறப்பட்டன.
- அர்த்த சாத்திரம், நாட்டிய சாத்திரம், திருவெம்பாவை தென்கிழக்காசிய நாடுகளில் செல்வாக்குப் பெற்றமை
- வடமொழிச் சாசனங்கள்
- இந்தியப் பண்பாட்டு இலக்கியங்கள் தென்கிழக்காசிய மொழிகளில் எழுதப்பட்டமை

The National e-learning Portal for The General Education